Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 17 (16.08.2003) சனிக்கிழமை இதழ்: 317

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1295)

**விண்ணாணம் விநாசியர்**



இனியாவது ஓடாமல் இருக்கட்டும் எண்டு எதிர்பாக்கினம் போல...!

# இந்திய வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயம் திடீரென ரத்து!

## முப்படைகளை சேர்ந்தோருக்கு 55 சதவீத சம்பள அதிகரிப்பு!

### அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வருகிறது

முப்படைகளையும் சேர்ந்தோருக்கான சம்பளங்களை 55 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்பு அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரவிருப்பதாக இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே, ஜெனரல் லொகான் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படியே, இந்தச் சம்பள உயர்வுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத்திற்கு 4000 பேரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் நாளைமுதல் 19 ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ளது.

## தூதுவர் நிருபம் சென் அறிவிப்பு

(கொழும்பு)

**கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்த, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவின் இலங்கை விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருப்பதாலேயே, சின்ஹாவின் இந்த விஜயம் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.**

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கா இலங்கை - இந்திய ஆணைக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே நாளை மறுநாள் கொழும்பு வரவிருந்தார்.

இவரது கொழும்பு விஜயத்தின் பின்னணியில் - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் கரிசனை அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலேயே, இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட இருக்கின்ற ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான் விவாதத்தை முன்னிட்டு ஜஸ்வந்த் சின்ஹாவின் கொழும்பு விஜயம் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக இந்தியத் தூதர் நிருபன் சென் கொழும்பில் தெரிவித்தார்.

## பேச்சுகளை ஆரம்பிக்கும் சூழலை நோர்வேயே ஏற்படுத்த வேண்டும்!

### விசேட தூதுவர் சொல்ஹெய்மிடம் ஜோசப் எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவேண்டிய சூழலை, நோர்வே அரசுதான் ஏற்படுத்த வேண்டுமென, தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்தித்துப் பேசும் போதே தாம் இந்தக் கோரிக்கையை விடுத்ததாக அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாக சபை குறித்தும் குரங்குப்பாஞ்சான் முகாம் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.



இலங்கை - தாய்லாந்துக்கிடையிலான பொருளாதார ஒப்பந்தத்தில், வெளிவிவகார அமைச்சர் ரீரோன் பெர்ணான்டோவும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சு அதிகாரியும் கையெழுத்திடுவதையும், பின்னால் தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சினவத்ரா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் சொல்ஹெய்மை சந்தித்து நேற்று பேச்சு!

### தமிழ்ச்செல்வனுடன் நடைபெற்ற பேச்சுக்குறித்து ஆராய்வு

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, நோர்வே விசேட தூதுவர் இரு நாட்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பான விளக்கங்களை இவர் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

திருகோணமலை குரங்குப்பாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் விவகாரம் தொடர்பாக புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஈ. பி. டி. பி. உறுப்பினர் படுகொலை தொடர்பாக தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் தெரிவித்தார்.

### இரகசியப் பொலிஸ் விசாரணை

உப்புவெளி செல்வநாயகபுரத்தில், இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள், இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த இரட்டைக் கொலை சம்பவம் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட இரகசியப் பொலிஸ் குழு உப்புவெளிக்கு சென்றிருப்பதாக, பொலிஸ் மா அதிபர் ரி.ஈ ஆனந்தராஜா தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து தூதரக அதிகாரிகள் குழு இன்று தமிழ்ச்செல்வனை சந்திக்கும்!

(கொழும்பு)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், இலங்கைக்கான தாய்லாந்து தூதரகத்தின் உயர்மட்டக் குழுவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு, இன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இன்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப் பணியகத்தில், இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சினவத்ரா இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு, நேற்று நாடு திரும்பியதையடுத்து, நடைபெறவிருக்கும் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென, கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மட்டு. கண்காணிப்பு குழு அலுவலகம் முன் சவப்பெட்டியை வைத்து ஈ.பி.டி.பி. போராட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்னால் - சவப்பெட்டியை வைத்து, ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது - இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரான அரசரத்தினம் ரதீஸ்கரனின் சடலத்தைத் தாங்கிய சவப்பெட்டியைச் சுமந்துகொண்டு, ஈ.பி.டி.பியினர் மட்டக்களப்பு நகரில் எதிர்ப்புப் பேரணியொன்றினை நடத்தினர்.

இந்தப் பேரணியைத் தொடர்ந்து- மட்டக்களப்பு நகரில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்கு முன்னால், தமது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு வலியுறுத்தினர். அத்துடன், பாதுகாப்பை உறுதிசெய்யும்வரை சவப்பெட்டியை எடுக்கப்போவதில்லை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலை எதிர்கொள்ள தயாராம்!

தென்மாகாண சபையில் ஆட்சிக்காலம் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் முடிவடையவிருக்கின்றது. எனினும் தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்த ஜனாதிபதி தீர்மானித்தால், அதனை எதிர்கொள்ளத் தயாராக விருப்பதாக, தென்மாகாண சபை முதலமைச்சர் எச்.ஜி. சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபையில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக குழு ஒன்றை நிய

(10ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# இன்று குருகுலகலாசாலையில் கருத்தரங்கும் பாராட்டுவிழாவும்

சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நடாத்தும் - மாதாந்த கருத்தரங்கும், பாராட்டு விழாவும் - இன்று மாலை 6.00 மணிக்கு குருகுல கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை இந்து மதகுரு பீடாதிபதி ஐ.மகேஸ்வரக்குருக்கள் நிகழ்த்துவார்.

சமாதான நீதிவானாகப் பதவியேற்ற கங்கைவேணியனின் பாராட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

குருகுல பொறுப்பாண்மைக்குலத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் - 'குரு பாரம்பரியமும் விழுமியங்களும்' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி (புழுங்கல் சிவப்பு நாடு) வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003, ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கு.கூ.சங்கத்திற்கும் வழக்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003 ஒக்டோபர் (MT) | 2003 நவம்பர் (MT) | 2003 டிசம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 142 | 142 | 142 |
| 02. | கைதடி | 68 | 68 | 68 |
| 03. | கொடிகாமம் | 127 | 127 | 127 |
| 04. | உடுப்பிட்டி | 30 | 30 | 30 |
| 05. | கட்டைவேலி நெல்லியடி | 42 | 42 | 42 |
| 06. | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07. | புலோலி | 25 | 25 | 25 |
| 08. | மருதங்கேணி | 77 | 77 | 77 |
| 09. | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10. | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11. | அச்சுவேலி | 144 | 144 | 144 |
| 12. | நீர்வேலி | 138 | 138 | 138 |
| 13. | மானிப்பாய் | 121 | 121 | 121 |
| 14. | பண்டத்தரிப்பு | 89 | 89 | 89 |
| 15. | அளவெட்டி மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16. | தெல்லிப்பளைஸ | 138 | 138 | 138 |
| 17. | சங்கானை | 183 | 183 | 183 |
| 18. | சுன்னாகம் | 186 | 186 | 186 |
| 19. | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20. | வேலணை | 47 | 47 | 47 |
| 21. | ஊர்காவற்றுறை | 65 | 65 | 65 |
| 22. | காரைநகர் | 51 | 51 | 51 |
| 23. | தீவகம் | 11 | 11 | 11 |
| 24. | நெடுந்தீவு | 26 | 26 | 26 |
| | மொத்தம் | 2400 | 2400 | 2400 |

2. கேளிவிகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= இனை யாழ் மாவட்ட புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.08.18 ஆம் திகதி தொடக்கம் 2003.08.27 ஆம் திகதி வரையிலான காலப்பகுதயில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந் தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

3. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= அந்தந்த மாவட்டச் செயலகங்களில் செலுத்தி, அரசாங்க மாவட்டச் செயலகங்களில் அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

4) கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் (சிவப்புநாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

5) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை **தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)** என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலு வலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.08.28 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக சேர்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும். அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

6) கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் முலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

7) கேள்விதாரர்கள் (Bidders) குறிப்பிட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்க வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

8) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

9) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல்கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம்.
2003.08.14

(சி-1350)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




## ர.ராஜ்கரன்

ரமேஷ்குமார் தாரணி (ஜிக்கி) தம்பதிகளின்
**செல்வப் புதல்வன் ராஜ்கரன்**
தனது முதலாவது பிறந்ததினத்தை இந்தியாவில்
லக்கி கவுஸ், ஜெய்நகர், கருமண்டபம், திருச்சி என்னும்
விலாசத்தில் கடந்த 12 ஆம் திகதி
வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை பேரன்மாரான திரு. திருமதி கோவிந்தராஜன் (இந்தியா), திரு. திருமதி பாஸ்கரன் (கம்போடியா) ஆகியோரும் பூட்டியான திருமதி மாரிமுத்து தில்லையம்பலமும் (இலங்கை) சீரும்சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(சி-1352) தகவல்: பேரன், பேர்த்தி

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்விகோரல்

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித் தொகை | | |
|---|---|---|
| 2003 ஒக்டோபர் | 2003 நவம்பர் | 2003 டிசம்பர் |
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003.08.18 ஆம் திகதி தொடக்கம் 2003.08.27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 1.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய வைப்பாக (விலை கேள் முறி - Bid bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)
3. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பட்டியலில் 2003.08.28 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றை தினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.
4. நீள தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக-PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது.)

செ.பத்மநாதன்,
தலைவர் / அரச அதிபர்
மாவட்ட கேள்விச்சபை / மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
14.08.2003

(சி-1351)

# இலங்கையருடன் சென்ற படகு கிரேக்கக் கடற்பரப்பில் விபத்து!

## இரு ஈராக்கியக் குழந்தைகள் உட்பட மூவர் பலி

(கொழும்பு)

இலங்கையரை ஏற்றிச்சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில், மூன்று பேர் பலியாகியுள்ளனர். பத்துப்பேரை மட்டுமே ஏற்றிச்செல்லும் வசதியுடைய படகில் 40 பேர் பயணம் செய்திருந்தனர். இப்படகில் இலங்கையரே அதி களவில் பயணம் செய்திருந்ததாகத் தெரியவருகிறது.

விபத்தில் உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் ஈராக்கியர்கள் எனத் தெரியவருகிறது. அவர்கள் இருவரும் குழந்தைகள் என்பது குறிப்பிடத் தக்கது. உயிரிழந்த மற்றையவர் கிரேக்கப் பெண்ணாவார்.

இவர்கள், ஏதாவது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அகதியா கச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

# ஜஸ்வந்சின்ஹாவின் வருகை முக்கியத்துவம் வாய்ந்தது!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாவின் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என வும், இவரது விஜயத்திற்கு ஊடகங் கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் பீரிஸ் கேட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா, எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் ஒன்றி னை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய விக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய நாடுகளுக் கிடையே நீண்டகாலமாக நல் லுறவு நிலவிவருகின்றது.

இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியளிக்க இந்தியா கணிசமான உதவியை வழங்கியுள்ளது. கடந்த மாதம் 1089 இராணுவத்தினர் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்த வருடம் 1,500 இராணுவச் சிப்பாயகள் இந்தியப் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

பலாலி விமானத்தளத்தில் ஓடு பாதையை மீளப் புனரமைக்கும் பணிக்கென, 300 மில்லியன் அமெ ரிக்க டொலரை இந்தியா - இலங் கைக்கு வழங்கியுள்ளது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம், இயற்கை அனர்த் தம் நிகழ்ந்தபோது, 10 மணித்தி யாலத்திற்குள் இந்தியா - இலங் கைக்கு 224 வைத்தியர்களுடன் வந்து, 1,889 பேருக்குச் சிகிச்சை வழங்கியது.

இலங்கை - இந்தியாவுக்கு இடையே 2002 இல் மட்டும் 10 மில் லியன் அமெரிக்க டொலர்கள் இலங் கையில் முதலீடு செய்யப்பட்டுள் ளது. இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை 3 ஆவது முதலீட்டு நாடாக வுள்ளது. இறக்குமதியில் 5 ஆவது நாடாக இலங்கை விளங்குகிறது.

இந்தியா 400 மில்லியன் அமெ ரிக்க டொலர்களை முதலீடு செய் துள்ளது. நூறு மில்லியன் அமெ ரிக்க டொலரை இலங்கைக்குக் கடனாகக் கொடுத்துள்ளது. இக்கட னைப் பன்னிரண்டு வருடங்களில் மீளச் செலுத்தவேண்டும் என, முன் னர் கூறப்பட்டது. தற்போது, 20 வருடத்தில் கொடுத்தாலும் பரவா யில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தவகையில் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே உள்ள உறவு நெருங்கியதாக இருப்பதால், இந்திய வெளியுறவு அமைச்சரின் விஜயத்தை ஊடகங்கள் முக்கியத் துவப்படுத்த வேண்டும் என, அமைச் சர் பீரிஸ் கேட்டுள்ளார்.

# வெலிஓயா குடியேற்ற வாசிகள் அநுராதபுரம் செல்ல விருப்பம்!

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கும், திருகோணமலைக்கும் இடையிலான வெலிஓயா பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்கள் - அநுராதபுரத்தில் குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தங்களின் விருப்பத்திற்கேற்ப தாம் குடியேற்றப்படவில்லை எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் நாடாளுமன்றம் செல்வதற்காகவே தங்களை வெலிஓயா பகுதியில் குடியமர்த்தினார்கள் என்றும், தெரிவித்த குடியேற்றவாசிகள், தாம் மீளவும் அநுராதபுரத்தில் குடியேற விரும்புவதாகத் தெரிவித்தனர்.

# போராட்ட நினைவுச் சின்னங்கள் ஏ-9 பாதையில் நிறுவப்படவுள்ளது

தமிழீழத் தாயக விடுதலைப் போராட்டச் சம்பவங்களை, தியாகங் களை, சாதனைகள்ள எடுத்தியம்பும் போராட்ட நினைவுச் சின்னங்கள்- ஏ-9 பாதையில் அமைக்கப்படவுள்ள தாகத் தெரியவருகிறது.

போராட்ட நினைவுச் சின்னங்கள் நிறுவப்படும் திட்டத்தின் கீழ், முதற் கட்டமாக ஏ-9 வீதியோரமாகப் போராட்டகாலச் சம்பவங்களின் நினைவுச்சின்னங்கள் அமைக்கப் படவுள்ளன.

ஏ-9 பாதையில் போராளிகளால் கவசவாகனங்கள் தாக்கியழிக்கப் பட்ட இடங்களில் - இந்த நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படவுள்ளதா கத் தெரியவருகின்றது.

ஆனையிறவு முகாமைத் தகர்க் கும் முயற்சியில், 1991 இல் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் கவச வாக னம் காணப்படுகின்ற பகுதியிலும் ஆனையிறவின் மையத்திலும் போர் நினைவுச்சின் னங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

போர்க்காட்சி பற்றிய ஒளிப்படங் களை நிரந்தரமாகக் காட்சிப்படுத்து வதற்கும், ஏற்பாடுகள் மேற்கொள்ளப படுவதாகத் தெரியவருகின்றது.



ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் திருகோணமலையில் முறைசாசார கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு வலயக் கல்வி அலுவலகங்களுக்கு தரா 2 மோட்டார் சைக்கிள் வழங்கும் வைபவத்தில் - வடக்கு -கிழக்கு மாகாண கல்வி செயலாளர் ஆர். தியாகலிங்கத்திடம் வண்டிக்கான ஆவணங்களை யுனிசெப் திருகோணமலை பிரதிநதி க்ப்ரியல்லா எல்ரோய் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு தாய்லாந்து தொடர்ந்து ஆதரவளிக்கும்!

## நாடாளுமன்ற விசேட உரையில் தெரிவிப்பு

இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, தாய்லாந்து அரசு வழங்கிவரும் ஆதரவு தொடர்ந்தும் கிடைக்கும் என்று, தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வத்ரா நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.

மேலும், தாய்லாந்துக்கும் இலங்கைக்குமிடையில் உள்ள கலாசாரமும் மதத் தொடர்புகளும் நீண்டகால சரித்திரத்தைக் கொண்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அந்த விடயம் அமைந்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையில் ஒரு மில்லியன் டொலருக்கான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நடந்த நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித் தார்.

# சமாதானப் பேச்சுக்கு உரிய தீர்வு இன்றேல் ஈழத்துக்கான போரில் ரெலோ இணையும்!

## செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்

(வவுனியா)

சமாதான முயற்சி விடயத்தில் அரசாங்கம் - விடுதலைப் புலிகளை ஏமாற்றமுயலுமானால், தமிழ்மக்கள் அனைவரும் இணைந்து ஈழத்துக்கான புனிதப்போரை ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்படும். தற்போது நடை பெற்றுவருகின்ற சமாதானப் பேச்சு வார்த்தையே, இறுதியான பேச்சாக அமையுமென்று, ரெலோ அமைப் பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரி வித்தார்.

- தற்போது நடைபெற்று வருகின்ற சமாதான முயற்சியிலும், அரசாங் கம் - தமிழ்மக்களை ஏமாற்றுமா னால், ரெலோ அமைப்பும் ஈழத்துக் கான புனிதப்போரில் இணைந்து கொள்ளும்.

எமது அமைப்பு கடந்தகாலங்க ளில் ஜனநாயக வழிக்குத் திரும் பியதுடன், பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொண்டோம். ஆனால், நாம் ஏமாற்றப்பட்டோம். இத்தகைய நிலை தொடருமானால், அனைவரும் சேர்ந்து போராடுவதைத்தவிர வேறுவழி யில்லை என, அவர் மேலும் கூறினார்.

இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபு குறித்து, தமிழ்க்கட்சிகளுட னும் ஆராயப்படும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளமை வரவேற் கத்தக்கதாகும்.

ஆனால், தமிழ்மக்களுக்கு ஏற்ற வகையில் இடைக்கால நிர்வாகசபை யினை அரசாங்கம் வழங்குமா என் பதில் சந்தேகமான நிலையே உள் ளது.

விடுதலைப் புலிகளால் தெரிவிக் கப்படுகின்ற யோசனைக்கு அமைய அரசாங்கம் இடைக்கால நிர்வாக சபையினை வழங்கவேண்டும். அதன் பின்னர், இறுதித்தீர்வு நோக்கிச் செல்லவேண்டும். இம்முறையும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டால், ரெலோ அமைப்பும் ஈழத்துக்கான புனிதப் போரில் இணைந்துகொள்ளும் என் றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத கடற்பயணம் மேற்கொள்ள தயாராகவிருந்த கப்பல் பிடிக்கப்பட்டது

## திருமலைக் கடலில் சம்பவம்

சட்டவிரோதமாகக் கடற்பயணம் ஒன்றை மேற்கொள்ள இருந்த சந் தேகத்துக்கிடமான கப்பல் ஒன்றை- திருகோணமலைப் பகுதியில் வைத் துப் பொலிஸார் கைப்பற்றியதுடன், அதிலிருந்த 19 பேரையும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சிறிய கப்பலில் 7000 லீற்றர் டீசலும், உலர் உணவுகளும் இருந்ததாக, கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கப்பல் திருகோண மலையிலிருந்து கொழும்புக்கு வந்து, அங்கிருந்து சிலரை ஏற்றிக் கொண்டு சட்டவிரோதமாகக் கடற் பயணம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

கப்பலைக் கொழும்புக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப் படுகிறது.

# அமைச்சர் மகேஸ்வரன் லண்டனுக்கு பயணம்!

(கொழும்பு)

லண்டனிலுள்ள இந்து ஆல யங்களின் சம்மேளனம் இன்றும், நாளையும் நடத்தும் 6 ஆவது இந்து மாநாட்டில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வதற்காக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் நேற்றுக்காலை லண்ட னுக்குப் பயணமானார்.

அமைச்சர் லண்டனில் தங்கி யிருக்கும் நாட்களில் - தமிழர்கள் மற்றும் இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் பல கலந்துரை யாடல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சர் மகேஸ்வரன் ஐரோப் பிய நாடொன்றுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

# பாதாள உலகத் தலைவர் உட்பட 28 பேர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

பாதாள உலகக் கும்பல் ஒன் றின் தலைவர் உட்பட, 28 பேர் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் பிரிவினரே, இவர்களைக் கைதுசெய்துள்ளனர். தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள பாதாள உல கக்குழு உறுப்பினர்களிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் - 15 கொலைச் சம்பவங்கள், 28 கொள்ளைச் சம்பவங்கள் தொடர் பாகத் தகவல் வெளியாகியுள்ளதாக, விசேட பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பாதாள உலகக்குழுவினால் கொள்ளையி டப்பட்ட சுமார் 32 இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு ஜீப்வண்டி, மட்டக்களப்பு பகுதியில் ஏழரை இலட் சம் ரூபாவிற்கு விற்கப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார்.

மேலும், இந்தக் குழுவினால் கொள்ளையிடப்பட்ட 12 வாகனங் கள் வன்னிப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த விசேட புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி அது தொடர்பாக தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தெனக் குறிப்பிட்டார்.

தற்போது கைதுசெய்யப்பட் டுள்ள 28 பேர் அடங்கிய பாதாள உலகக் குழு கொள்ளையடித்து விற்பனை செய்த 9 வாகனங்களும், அவர்கள் பயன்படுத்திய துப்பாக்கி உட்பட, பத்து ஆயுதங்களும் கைப் பற்றப்பட்டுள்ளன.

# முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்

## மட்டக்களப்பு அரசியற்பொறுப்பாளர் கௌசல்யன்

முஸ்லிம் அரசியல்வாதிகள் மிக விழிப்போடும், தெளிவோடும் சிந்தித்துச் செயற்படவேண்டும். இந்த அரசியல்வாதிகளின் திட்டமிடப்பட்ட இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. இவ்வாறு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு ஆலையடிவேம்புப் பகுதியில் - முஸ்லிம் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின் பத்திரிகையாளர் சந்திப்பில், மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கசப்புணர்வுகளை மறந்து, நல்லுறவை மேம்படுத்த நாம் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். இதில் ஓர் அங்கமாக இத்தகைய மாவட்ட குழுக் கூட்டங்களை நல்லமுறையில் நடத்தி வருகிறோம். இப்படியான நல்ல நிகழ்வுகள் நடக்கும்காலம் சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் எமக்கு கவலையை அளிக்கின்றது. இவர்கள் கடந்த காலம் நடந்த முஸ்லிம்களின் படுகொலைகளை மெருகூட்டி, முஸ்லிம்கள் - தமிழரால் கொல்லப்பட்டார்கள், புலிகளால் கொல்லப்பட்டார்கள் என விசமப் பிரசாரம் செய்கின்றனர்.

ஆனால், வட - கிழக்கில் மூவின மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எமது தேசியத் தலைவரின் முழு நோக்கமும், கடந்தகாலப் படுகொலைகள், கசப்பான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் ஒரு போதும் நடக்கக்கூடாது என்பதே இதற்காகவே தமிழ் - முஸ்லிம் மக்களிடையே அடிமட்டப் பிரச்சினைகளுக்குக்கூட பேச்சுவார்த்தை நடத்தி, நல்ல சூழலை உருவாக்குகின்றோம்.

இக்காலகட்டத்தில் குரோத செயற்பாடுகளை, இனங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவிப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவர்கள். இத்தகைய செயற்பாடுகள் வளருமாக இருந்தால், தமிழ் - முஸ்லிம் மக்களிடம் மேன்மேலும் முரண்பாடு வலுக்கும்.

ஆனால், இத்தகைய நிலைமை உருவாவதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. விடுதலைப் போராட்டத்திற்கு நல்ல தீர்வு கிடைத்து, வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதே, எமது தேசியத் தலைவரின் நோக்கம்.

இதற்காகவே சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்த வேண்டு கோளுக்கிணங்க, அரசியல் பேச்சுவார்த்தை ரீதியான முன் னெடுப்பைச் செய்துகொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (07)

# முல்லைத்தீவு ஆலயங்களுக்கு காசோலை வழங்கல் நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட ஆலயங்களைப் புனரமைப்பதற்காக- காசோலைகள் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. ஆலய தலைவர் அல்லது செயலாளர் ஆலய கடிதத் தலைப்பு, இறப்பர் முத்திரை என்பவற்றுடன் வந்து, காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இந்துகலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் - முள்ளியவளை, அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் - 1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, ஸ்ரீ உலகளந்தப் பிள்ளையார் கோவில் - புதுக்குடியிருப்பு, மாங்குளம் மாவடி சித்திவிநாயகர் ஆலயம் - முல்லைத்தீவு, சம்மளந்துளாய் விநாயகர் ஆலயம் - ஒட்டுசுட்டான், சீதளாம்பிகை சமேத சிவபுரநாதர் சிவாலயம் - வவுனிக்குளம், தேவிபுரம் நவமணிப் பிள்ளையார் தேவஸ்தானம் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு கனிஷ்ட வித்தியாலயம் - புதுக்குடியிருப்பு, மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் - முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சனசமூகநிலையம் - முல்லைத்தீவு, மந்துவில் ஸ்ரீ மகா கணபதி ஆலயம் - முல்லைத்தீவு, குமுழமுனை கற்பக விநாயகர் ஆலயம்- முள்ளியவளை ஆகிய இந்து ஆலயங்களுக்கே புனரமைப்பு நிதி வழங்கப்படவுள்ளதாக இந்து கலாசார அமைச்சு தெரிவித்துள்ளது.




யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு மற்றும் நிறுவுனர் தின நிகழ்வில் - பிரதமவிருந்தினரின் துணைவியார் சுஜந்தினி ஸ்ரீதரன்- மாணவரொருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அளவெட்டி வடக்குப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்குப் பகுதியில் அண்மைக்காலமாகத் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. ஒரே இரவில் பல வீடுகளில் திருடர்கள் புகுந்தபோதும், வீட்டார் விழித்துக் கொண்டமையால் திருடர்கள் தப்பியோடிவிட்டனர்.

அதற்கு முன் அம்பனை வீதிப் பகுதியிலுள்ள விவசாய, மருந்து விற்பனை நிலையத்தின் காவலாளியை மிரட்டிவிட்டுப் பெறுமதி வாய்ந்த மருந்து வகைகள் திருடப்பட்டுள்ளன.

தருமராசா என்பவரது வீட்டிலும், சிவசிவா என்பவரது வீட்டிலும் திருடர்கள் உட்புக முயற்சித்தபோது, வீட்டார் கூக்குரலிடவே திருடர்கள் தப்பியோடிவிட்டார்கள். இப்பிரதேசங்களிற்கு அண்மையில இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலவச ஆங்கில வகுப்பு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன்- இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் இலவச ஆங்கில வகுப்பு ஒன்றை நிலைய மண்டபத்தில் ஆரம்பித்து உள்ளனர்.

இந்த வகுப்புகளில் கலந்து பயன் பெறுமாறு இளைஞர் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை, தமிழ் தகவல் தொடர்பு ஒழுங்கமைப்பு நிறுவனத்துடன் **(TITA)** இணைந்து இலவச கணினிப் பயிற்சி வகுப்புக்களையும் இளைஞர்கழகத்தினர் நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## விண்ணப்பம் கோரல்

வடக்கு - கிழக்கு மனிதவள முகாமைத்துவப் பயிற்சிக்கு இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமது பெயர் விபரம், கல்வித் தகைமைகளைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தத்தமது கிராம அபிவிருத்தீச் சங்சங்கள் ஊடாக அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (116)


வாழ்க வளமுடன்

1/2 HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்



பெயர் : பி.வினுஜா
முகவரி: உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

எட்டாவது அகவையில்

பெயர் : ச.சாதனா
முகவரி: நெல்லியடி, கரவெட்டி.



ஒன்பதாவது அகவையல



பெயர் : உ.யதுஷாயினி
முகவரி: அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## பொலிஸ் தாக்கிய நபரின்

# மருத்துவ செலவினத்துக்கு ஐயாயிரம் ரூபா நஷ்டஈடு!

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்துக்கு முறையிடச்சென்றபோது, பொலிஸாரினால் தாக்கப்பட்டுக் கைமுறிந்த நபருக்கு மருத்துவ செலவிற்காக ஐயாயிரம் ரூபாவினை வழங்கிய சம்பவமொன்று, கோப்பாயில் இடம்பெற்றுள்ளது.

கடந்தமாதம் 3 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முறையிடுவதற்கு சென்ற நபருக்கு, பொலிஸார் ஒருவர் தாக்கியதால் அவரது கை உடைந்துள்ளது.

அந்த நபர் இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடொன்றினைச் செய்திருந்தார்.

பின்னர், அவ்விசாரணை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சென்ற மாதம் 12 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தாக்கப்பட்ட நபருக்கு மருத்துவ செலவிற்காகக் குறிப்பிட்ட பொலிஸார், ஐயாயிரம் ரூபாவினை வழங்குவதாகக் கூறியதையடுத்து, மேற்படி பிரச்சினையினையை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் சமரசம் செய்துவைத்துள்ளனர்.

# சட்டவிரோத மண் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்ற சட்டவிரோதமான மண்ணகழ்வு காரணமாக- அப்பகுதிகளில் நீர் வெளியேறும் அபாயம் தோன்றியுள்ளது.

செம்மணிப் பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபடுகின்ற வயல் உரிமையாளர் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வயல்வெளிகளிலுள்ள வரம்புகளே இவ்வாறு நாளுக்குநாள் சட்டவிரோதமான முறையில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன.

இவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் எடுப்பார்களா என, அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# சிறைச்சாலை பிரதி அத்தியட்சகரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு

யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள கைதியைத் தாக்கியதாகச் செய்யப்பட்ட புகார் தொடர்பாக- விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சிறைச்சாலை பிரதி அத்தியட்சகருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை மிகவும் மோசமாகத் தாக்கியதாகவும், சித்திரவதைகள் புரிந்ததாகவும், மனித உரிமைகள் ஆணைக்குழுவில், யாழ். சிறைச்சாலை பிரதி அத்தியட்சகருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முறைப்பாட்டை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, தற்போது விடுதலையாகியுள்ள கோவீல் வீதி, நல்லூரைச் சேர்ந்த அன்ரனி ஜெயக்குமார் மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லக்ஸ்மணன் ஆகியோர் செய்துள்ளனர்.

இவர்கள் தமது மனுவில் தடுப்புக்காவலின்போது - தாம் கட்டித் தொங்கவிடப்பட்டு, அடிக்கப்பட்டதாகவும், குதிக்கால் போன்று அதிக வலியை ஏற்படுத்தும் இடங்களில் மோசமாகத் தாக்கப்பட்டதாகவும், தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

# விடுகதைகளும் விடைகளும்

1. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை. அது என்ன?
   திருஷ்டி பூசணி.
2. நூல்நூற்கும். சட்டை அல்ல. அது என்ன?
   சிலந்தி வலை.
3. கால் இல்லாதவன், தள்ளாடியபடியே பயணம் செய்வான். அவன் யார்?
   படகு.
4. உச்சாணிக் கொப்பிலே உரல்கட்டித் தொங்குது. அது என்ன?
   பலாப்பழம்.
5. ஆற்றிலே விழுவான், ஆனால் நனையமாட்டான். அவன் யார்?
   சூரிய, சந்திர நிழல்.
6. ஊசி நுழையாத கிண்ணத்தில், ஒரு செம்பு தண்ணீர். அது என்ன?
   தேங்காய்.
7. நடந்தால் அழகு, ஆடினால் பேரழகு. அது என்ன?
   மயில்
8. பஞ்சைத் தின்றவன் படுத்துக் கிடக்கிறான். அவன் யார்?
   தலையணை, மெத்தை.
9. சொன்னதைச் செய்வான் அடிமையல்ல, பலமொழி தெரிந்தவன் அறிஞனல்ல. அவன் யார்?
   கணினி.

*லோ. தேனுஷா,*
*மாணிக்கவாசகர் வித்தியாலயம்,*
*கரவெட்டி.*

---

1. அச்சில்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
   வளையல்.
2. அடிமேல் அடிபட்டும், அசராத சின்னப்பையன், குறி வைத்து இடம்பார்த்து தப்பாமல் சேர்வான். அவன் யார்?
   தபால்.
3. அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள். அது என்ன?
   பனம்பழம்.
4. உச்சியிலே கிரீடமாம், உடம்பெல்லாம் தழும்பாம். அது என்ன?
   அன்னாசிப்பழம்.
5. இதுவரையில் இல்லாதது, எப்போதும் இருப்பது, யாரும் பாராதது. அது என்ன?
   நாளைய தினம்.
6. ஒருபயணம் போக இரண்டு குதிரை. அது என்ன?
   செருப்பு.
7. இளமையில் இருந்த கொம்பு வளர்ந்ததும் இல்லை. அது என்ன?
   நிலா.
8. உணவை எடுத்திடுவான், உண்ணாமல் வைத்திடுவான், அவன் யார்?
   அகப்பை.

## My Self

My name is Asokamala.
My father's name is Sriskantharaja.
My Mother's name is Vijajaluxsumi.
I am Fifteen years old.
I am in grade ten.
I have four brothers and three sisters . My School name is J/Uduppiddy Girl's College. My Friends are kirisha, pratha and Komala. I live at uduppiddy.

Thank you.

*S. Asokamala*
*Grade 10,*
*J/Uduppiddy Girl's College.*

# தகவல் களஞ்சியம்

## விடுமுறை காலத்தில் விநோதமான புதிர்களுக்கு விடை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

★ ஏழு மாம்பழங்களைப் பன்னிரண்டு பேருக்குச் சமமாகப் பங்கிடவேண்டும். ஒரு மாம்பழத்தில் அதிகமாக நான்கு துண்டுகள் வெட்டலாம். அதற்கு மேல் வெட்டக்கூடாது. எப்படிப் பங்கிடுவது?

★ ஒருமுறை நான் வவுனியாவிலிருந்து கொழும்பிற்கு ரிக்கற் வாங்காமலே சென்றேன். வழியில் என்னை எவரும் ரிக்கற் கேட்கவில்லை. எவ்வாறு ரிக்கற் வாங்காமல் பயணம் செய்திருப்பேன்?

★ அருகில் காட்டப்பட்டுள்ள ஒன்பது புள்ளிகளையும் இணைத்து, நான்கு கோடுகள் வரையப்படவேண்டும். தாளிலிருந்து பென்சிலை அகற்றாது ஒரே தடவையில் வரையவேண்டும். எவ்வாறு?



★ ஐந்து பூனைகள், ஐந்து எலிகளைச் சாப்பிட, ஐந்து நிமிடம் எடுக்கும் எனின், நூறு பூனைகள், நூறு எலிகளைச் சாப்பிட எவ்வளவு நேரம் எடுக்கும்?

★ உழவன் ஒருவன் ஒரு சாக்கு நிறைய நெல்லைக் கொண்டு வந்தான். அவனது தொழிலாளி இரண்டு சாக்குகளைக் கொண்டு வந்தான். இருவரில் யார் கூடிய நிறையைத் தூக்கி வந்தனர்?

★ உங்களிடம் ஆறு தீக்குச்சிகள் உள்ளன. ஒவ்வொரு தீக்குச்சியும், மற்ற ஐந்து தீக்குச்சிகளையும் தொட்டுக் கொண்டிருப்பதுபோல உங்களால் வைக்க முடியுமா? எவ்வாறு?

★ படமாளிகையினுள் ரிக்கற் வாங்கும் கூட்டத்தின் வரிசையில் நான் நின்றபோது, எனக்கு முன்னால் இருப்பவர்களை எண்ணினாலும், எனக்குப் பின்னால் இருப்பவர்களை எண்ணினாலும், நான் பதினோராவது ஆள் எனின், அந்த வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நிற்கிறோம்?

★ ஒரு சிறிய குடையைப் பிடித்துக்கொண்டு மூன்று பேர் வந்தனர். அவர்களில் ஒருவர்கூட நனையவில்லை எப்படி?

★ படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 12 தீக்குச்சிகள் ஐந்து சதுரங்களாக (நான்கு சதுரங்கள், நான்கையும் உள்ளடக்கிய ஒரு சதுரம்) வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு தீக்குச்சிகளை மாற்றுவதன் மூலம் 10 சதுரங்களைப் பெறமுடியுமா? எவ்வாறு?



★ 10 m நீளமும், 8 m அகலமும் கொண்ட ஒரு சுவருக்கு வர்ணம் பூச ஏற்படும் செலவு 100 ரூபாவாகும். இரு மடங்கு நீளமும், இரு மடங்கு அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு செலவாகும்?

விடைகள் அடுத்த வாரம்.
P. உமாசங்கர்,
ஆசிரியர்,
பொது அறிவு நுண்ணறிவுத்துறை.

இங்கே மடிக்கவும்



# பொறாமைக் குதிரை

ஒரு காட்டில் அழகான குதிரை ஒன்று சுற்றிக் கொண்டிருந்தது. அந்தக் காடு மிகவும் அழகான காடு. பெரிய புல்வெளி, நீர்வீழ்ச்சி எல்லாம் இருந்தன.

அவ்வளவு பெரிய புல்வெளியில் அந்தக் குதிரை மட்டும்தான் வசித்தது. தனக்குச் சொந்தமான அந்த இடத்தைப் பற்றி, குதிரைக்கு மிகவும் பெருமை. காலையிலிருந்து மாலைவரை அங்கே புல்லைச் சாப்பிட்டு, நீர்வீழ்ச்சியில் தண்ணீர் குடித்து, புல்வெளியைச் சுற்றி ஓடிவருவது மட்டும்தான் வேலையே அதுக்கு.

ஒருநாள் காலையில் அந்தப் புல்வெளிக்குப்போனபோது, அங்கே ஒரு மானைப் பார்த்தது. மான் ஒரு ஓரமாகப் புல்லைச் சாப்பிட்டுக்கொண்டு இருந்தது.



அதைப் பார்த்த குதிரைக்குக் கோபம் வந்தது. "எனக்குச் சொந்தமான இடத்துக்கு நீ எப்படி வரலாம்? இது என் புல்வெளி. இங்கே நீ சாப்பிடக்கூடாது. இது என் நீர்வீழ்ச்சி. இங்கே நீ தண்ணீர் குடிக்கக்கூடாது. இந்த இடத்தைவிட்டு வெளியே போ" என்று மானிடம் சண்டை போட்டது.

மான் அமைதியாகத் தலையைத் திருப்பி, "குதிரையே! நீ ஏன் இப்படி கோபிக்கிறாய்? இவ்வளவு பெரிய புல்வெளியில் நானிருந்தா உனக்கென்ன கஷ்டம்? இது ஒன்றும் நீ உருவாக்கினது இல்லை. கடவுள் உருவாக்கினது. நான் இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டேன். உன்னால் முடிந்ததைப் பார்" என்று சொல்லிவிட்டுப் புல்மேய ஆரம்பித்தது மான்.

குதிரைக்குப் பயங்கரக் கோபம். 'என்னையே எதிர்த்துப் பேசுகிறதே இந்த மான். இப்போது இதை விட்டுவிட்டா, நாளைக்கு இதோட குடும்பம், குட்டி எல்லாம் வந்து எனக்கே புல்லுக்கு வழியில்லாமப் போடும். அதனாலே ஒரு வழிசெய்யவேணும்' என்று நினைத்தது.

பக்கத்து ஊர்ப்பக்கம் போனது குதிரை. அங்கே ஒரு மரம்வெட்டியிடம், "பாவம், நாளெல்லாம் மரம்வெட்டி நீ கஷ்டப்படுறாய் உனக்கு நான் ஒரு தங்க மானைக் காட்டுறன். அதை வைத்து நீ பணக்காரனாக மாறலாம்" என்று ஆசைகாட்டியது குதிரை.

மரம்வெட்டி மனதுக்குள், 'என்னை என்ன கிறுக்கன் என்று நினைத்துவிட்டதா இந்தக் குதிரை. எங்கேயாவது தங்கமான் இருக்குமா? ஆனால், இந்தக் குதிரை எனக்குப் பயன்படும். என்னை ஏமாற்ற நினைத்த குதிரையை, நான் ஏமாற்ற வேண்டியதுதான்' என்று நினைத்துக்கொண்டான். "குதிரையே! மான் மிக வேகமாகப்போகும். என்னால் அதைப்பிடிக்க முடியாது. அதனால், நான் உன்மேல் ஏறி இருக்கிறேன். வேகமாகப் போய் அதைப்பிடிக்கலாம்" எனறு சொன்னான். 'சரி' எனறது பொறாமையிலிருநத குதிரையும். அதன்மேல் கடிவாளத்தைப் போட்டுக் காட்டுக்குள் சென்ற விறகுவெட்டி, விறகுகளை அதன் மேல் அடுக்கினான்.



"மானைப் பிடிக்கிறேன் என்று தானே சொன்னாய். இப்போது என்மேல் விறகை அடுக்குகிறாயே" என்று குதிரை கேட்டது.

"முட்டாள் குதிரையே! நீ என்னைத் தங்கமான் ஆசைகாட்டி, உன் காரியத்தைச் சாதிக்க நினைத்தாய். ஆனால், எனக்கு நீ பயன்படுகிற மாதிரிச் செய்துவிட்டேன். என்னிடமிருந்து நீ தப்பிப் போகமுடியாது. உன் பொறாமையால், உன் சுதந்திரத்தை இழந்துவிட்டாய்" என்று பதில் சொன்னான் விறகுவெட்டி. அன்றிலிருந்துதான் மனிதர்களுக்கு குதிரை அடிமையாக இருக்கிறதாம்.



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### பிரான்ஸ்

வாராந்தம் அறிந்துகொள்ளும் நாடுகள் வரிசையில் - இந்த வாரம் பிரான்ஸ் நாடு பற்றி அறிந்துகொள்வோம்.

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | பாரிஸ். |
| பரப்பளவு | - | 05 இலட்சத்து 52 ஆயிரம் ச.கி.மீ. |
| மொழி | - | பிரெஞ்சு, வட்டார வழக்கு மொழிகள். |
| சமயம் | - | கிறிஸ்தவம். |
| நாணயம் | - | பிராங் |
| சராசரி ஆயுள் | - | ஆண் - 78.2, பெண் - 82.1. |

இந்த நாடு மேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடுகளில் - பரப்பளவில் பெரிய நாடாகும்.



ஜக்கீஸ் கிராக்

புகழ்மிக்க ஈபெல் கோபுரம் இங்கே உள்ளது. பிரெஞ்சு வைன் உலகப் பிரசித்தம் வாய்ந்தது.

1792 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் தாயகமாக விளங்குவது. தொழில் மற்றும் விவசாயத்துறையில் முன்னணியிலுள்ள நாடாகும். கால்நடைகள், கோதுமை, திராட்சை, உருளைக்கிழங்கு, அப்பிள் போன்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தியும், இரும்பு மற்றும் உருக்கு, இரசாயனம், கார், மின்னணுப்பொருட்கள், கனிமம் - இரும்புத்தாது உற்பத்திகளும் முக்கிய உற்பத்திப் பொருட்களாக விளங்குகின்றன.




பாரிஸ் - ஹோவர், வில்லி நான்டிஸ் ஆகிய நகரங்கள், பிரான்ஸின் முக்கிய நகரங்களாகக் காணப்படுகின்றன.

சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் விஜயம் செய்யும் நாடாகவும் இது விளங்குகின்றது. உலக மகா வீரனாகத் திகழ்ந்த நெப்போலியன் - பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 2000 ஆம் ஆண்டு யூரோ கோப்பைக் காற்பந்துப் போட்டியில், வெற்றிபெற்ற அணியாகப் பிரான்ஸ் திகழ்கின்றது.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ச.சிந்துஜா
கற்கும் பாடசாலை :-
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, விளையாட்டு.



முழுப்பெயர் :- சு.மிதுனராஜ்
கற்கும் பாடசாலை :-
வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், பொது அறிவு.



முழுப்பெயர் :- தா.கோகுலகிருஷ்ணன்
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், ஆங்கிலக் கதைப் புத்தகம் வாசித்தல்.



முழுப்பெயர் :- வி.அனுரதன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், சித்திரம், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- த.ஐதுர்சன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கட்டுரை, சித்திரம், தொலைக்காட்சி பார்த்தல், கவிதை.

முழுப்பெயர்:- த.மதனகா
கற்கும் பாடசாலை :-
ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சங்கீதம், சித்திரம்.

முழுப்பெயர்:- த.சாயிராம்
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
கற்கும் தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெற், சித்திரம், ஆங்கிலம் வாசித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................
......................................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

## சர்வதேச தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 26 | ~ | உலக சுங்கத்துறை நாள் |
| பெப்ரவரி | 14 | ~ | காதலர் தினம் |
| பெப்ரவரி | 25 | ~ | காசநோய் தடுப்பு தினம் |
| மார்ச் | 08 | ~ | மகளிர் தினம் |
| மார்ச் | 15 | ~ | ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 22 | ~ | உலக நீர் நாள் |
| மார்ச் | 23 | ~ | வானிலை நாள் |
| ஏப்ரல் | 07 | ~ | நலவாழ்வு தினம் |

லோ.தேனுஷா, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

இங்கே மடிக்கவும்





நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

- திருக்குறள்

# நமது நோக்கு

## காலமே பதிலளிக்கும்!

தனக்குள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் - வலிந்து போரைத் தொடங்கத் திட்டமிடுவதான செய்தி - தமிழ்மக்களை ஆச்சரியத்துக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

கடந்த பதினேழு மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள், நாட்டில் அமைதியான தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பு, தமிழ்மக்கள் மட்டுமல்லாமல் - சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியிலும் அதிகரித்திருந்த சூழலில்தான், இத்தகைய செய்தி வெளியாகியிருக்கின்றது.

சமாதான முயற்சிகளில் புலிகள் பூரணமான ஒத்துழைப்பைக் காட்டினாலும் - சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடைக்கால ஆட்சியின்கீழ் நாட்டை வைத்துக்கொண்டு, மீண்டும் ஒரு போரை வலிந்து ஆரம்பிப்பதற்கான திட்டங்களை, ஜனாதிபதி சந்திரிகா இரகசியமாக வகுத்திருப்பதாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்களே கூறியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்தவரையில், இந்த சமாதான முயற்சிகளில் அரசு ஈடுபட்டபோது அவர் தீவிர ஆர்வம் காட்டிச் செயற்படவேயில்லை.

ஏனோதானோ என்ற நிலையில்தான் - வேண்டாவெறுப்பாக தனது ஆதரவை வழங்கி வந்தார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் இந்தச் சமாதான முயற்சிகளைக் குழப்பினால், நாட்டு மக்களின் விரோதத்தைச் சம்பாதிக்க வேண்டிவரும் என அவர் அச்சமடைந்திருந்தார்.

ஆனால், சமாதானப் பேச்சுக்கள் தீர்க்கமான ஒரு கட்டத்தில் இடைநிறுத்தப்பட்டு, புலிகளின் கோரிக்கையின்படி, அரசு இடைக்கால நிர்வாக யோசனை ஒன்றை முன்வைத்துள்ள நிலையில்தான், சமாதான முயற்சிகளை முறியடிக்கும் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்த, ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஜே.வி.பி மற்றும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் ஆர்ப்பாட்டங்கள் - சமாதான விரோதச் செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்ற பின்னணிச் சூழ்நிலையில்தான், இந்த இரகசியத்திட்டம் குறித்த செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

பாதுகாப்பு அதிகாரங்களை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, இத்தகைய திட்டமொன்றை மிக இலகுவாக உருவாக்கிச் செயற்படுத்தமுடியும். பொதுமக்கள் விரும்பாத ஒரு தீர்வைக்கூட - திணிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகாவிடம் அதிகாரங்கள் இருக்கின்றன.

தனது அரசியல் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டும், சர்வதேச அபிப்பிராயம் தனக்கெதிராகத் திரும்பாமல், இருப்பதைக் கவனத்தில் கொண்டுமே, ஜனாதிபதி சந்திரிகா, இதுவரை இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடத் தயக்கம் காட்டியிருக்கலாம்.

ஆனால், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற ஆர்ப்பாட்டங்கள் தென்பகுதியில் தீவிரமடைந்துவரும் சூழலில் - மீண்டுமொரு போரை அரம்பித்து, புலிகளை ஒரு வலிந்த போருக்குள் தள்ள எடுக்கப்படுகின்ற முயற்சியாக இதைக் கருதலாம்.

இத்தகைய வலிந்த போருக்குள் புலிகளைத் தள்ளிவிடுவதன்மூலம், சமாதான முயற்சிகளை முற்றாகவே குழிதோண்டிப் புதைப்பதற்கும், புலிகள் மீதான சர்வதேச அபிப்பிராயங்களை முற்றாக மாற்றியமைப்பதான முயற்சியாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான செயற்பாடுகளை - அடிப்படை தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

போரொன்று இப்போதைய சூழ்நிலையில் ஏற்படுவதை, எந்தவொரு இனமக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றபோதிலும், சமாதான முயற்சிகளில் இருந்து புலிகள் விலகிக்கொண்டதாக காட்டும் வகையிலான வலிந்த போருக்குள் புலிகளைத் தள்ளிவிடுவதற்கான முயற்சிகள் இனிவரும் காலத்தில் மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கலாம். இதை எச்சரிக்கையுடன் நோக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டினை குறைக்க வேண்டாம் என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்த உத்தரவு இதனடிப்படையில்தான்.

அதேவேளை - கடந்த காலங்களில் நெருக்கடியான சூழ்நிலைகளில் இராணுவ ரீதியிலான - போருக்கு நிதி , ஆயுத உதவிகளை வழங்கிய இஸ்ரேல், உக்ரேன், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சுக்களுடனும், ஜனாதிதி சந்திரிகா நெருங்கிய ஒத்துழைப்புக்களை பேணிவருவதாகவும் கூறப்படுகின்றது.

இது ஒருமுழு அளவிலான போரை மீண்டும் கட்டவிழ்த்து விடுவதற்கான முன்னோடி நடவடிக்கையாக குறிப்பிடலாம். ஆனாலும் - புலிகள் ஒரு போரைத் துவங்குவதற்கு வலிந்து நிர்ப்பந்திப்பது இந்தத் திட்டத்தில் ஒரு கட்டமாக இருக்கலாம்.

ஏற்கனவே, புலிகளைப் போரைத்துவக்குமாறு நிர்ப்பந்திக்கும் வகையில் - ஜனாதிபதிக்கு நெருக்கமான படைவட்டாரங்கள் மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. சர்வதேச கடற்பரப்பில் நடந்த சம்பவங்கள் இதற்கு உதாரணம்.

இத்தகைய செயற்பாடுகள் மூலம், ஜனாபதிபதி சந்திரிகாவிற்கு கிடைக்கக்கூடிய லாபம் என்ன? இதுவரைகாலப் போர் மூலம் கண்ட அழிவுகளை மீளவும் காண நினைக்கிறாரா? இது அவரது அரசியல் எதிர்காலத்திற்கு நல்லதா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# கிளிநொச்சி உணவகங்களில் 'லஞ்சீற்' பாவனைக்குத் தடை!

## முதலாம் திகதி முதல். நடைமுறைக்கு வருகிறது

கிளிநொச்சி மாவட்ட உணவகங்களில் லஞ்சீற் பாவனைக்கு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து தடைவிதிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் - லஞ்சீற் பாவனைகளை நிறுத்தி, அதற்குப் பதிலாக வாழை இலை, தாமரை இலைகளைப் பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் குழு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

மாவட்ட சுற்றாடல் மாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக, எதிர்வரும் 01.09.2003 முதல், கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில், மேற்படி லஞ்சீற் பாவனை தடைசெய்யப்படுகின்றது. எனவே, உணவகங்களின் உரிமையாளர்களை ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டியுள்ளதுடன் - வாழை, தாமரை இலைகளைப் பாவனைக்குட்படுத்தும்படியும் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொ.நித்தியானந்தன் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளனர். (122)

# வடக்கு-கிழக்கில் இருவருட மருந்தாளர் பயிற்சிநெறி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இரண்டு வருடங்களைக் கொண்ட மருந்தாளர் பயிற்சி நெறியை - யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று இடங்களிலும் நடத்தவுள்ளது.

இலங்கை மருத்துவ சபை நடாத்தும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துமுகமாக, இப்பயிற்சி நெறி நடாத்தப்பட இருப்பதாக - அமைச்சின் மாகாண பணிப்பாளர் டொக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட, க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்த 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 27 ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### வடமராட்சி கிழக்கு உதவி அரச பிரிவின்

# 5 கிராம சேவையாளர் பிரிவுகள் பருத்தித்துறை செயலகத்துடன்!

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் - இம்மாதம் முதல் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளன.

மணற்காடு, அம்பன், குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளுமே தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கிலேயே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள இந்த ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. ஏனைய கிராம அலுவலர் பிரிவுகள் யாவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது.

இதேவேளை, இக்கிராம அலுவலர் பிரிவுகள் - பருத்தித்துறை பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டது குறித்து, பொதுமக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (122)

# மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் ஊழியர்களின் பற்றாக்குறையால் பெரும் சிரமம்!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக, பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

24 ஊழியர்கள் கடமைபுரிய வேண்டிய இப்பணிமனையில், 7 ஊழியர்கள் மாத்திரமே, கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். சிறாப்பர், நிர்வாக உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாமை காரணமாக, மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எழுதுவினைஞர்கள் பற்றாக்குறை காரணமாக, இவர்களின் வேலைகள் பலவற்றைக் கிராமசேவை அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

இவற்றைத்தவிர றோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம் என்பவை இல்லாமை காரணமாக உரிய வேலைகளைக் குறித்தகாலத்தினுள் செயலகத்திற்கு அனுப்ப முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கான தருண அருண திட்டம் ஆரம்பம்!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தகவல்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்குச் செயற்படுத்தப்பட இருக்கும் 'தருண அருண' என்ற திட்டம் - செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் ஆரம்பமாக இருக்கிறது.

இதற்காக உலக வங்கியிடமிருந்து 100 கோடி டொலர் பெறப்பட்டுள்ளது என்று தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தற்போது, வேலையற்றிருக்கும் 26 ஆயிரம் பட்டதாரிகளுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வருடாவருடம் 12 ஆயிரம் தொடக்கம் 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களுக்கு வேலைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

### பளைப்பிரதேசத்தில்

# கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழில் மேற்கொள்ள கடனுதவி

(ஆழியவளை)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கணவனை இழந்த 100 பெண்களுக்கு - சுயதொழில் முயற்சிக்கென தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும், 45 வயதிற்குட்பட்ட 100 விதவைகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மேற்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான பயிற்சிப்பட்டறை கடந்த புதன்கிழமை - பளை உதவி அரசாங்க அதிபர் சு.புத்திரசிகாமணி தலைமையில் வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

பளை, முகாவில் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மாதர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றினர். (122)

# மட்டக்களப்பில் கைதான 8 புலிகளுக்கும் 28 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியல்

மட்டக்களப்பில் கல்லடி பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 8 விடுதலைப்புலி உறுப்பினர்களையும், எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எச்.எம் அஜ்மீர் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்றிலிருந்து - மட்டக்களப்பு நோக்கி வந்த பிக்கப் வாகனத்தில் வந்த இவர்களை, ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் - வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்கள் மீதான வழக்கு, கடந்த வியாழக்கிழமையன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து, இவர்களை 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை - இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு, பொலிஸ் தரப்பு மனுத்தாக்கல் செய்ததையடுத்து, நீதிவான் இதற்கு அனுமதி வழங்கினார்.

தற்போது புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப்பெறவும் நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

பகுப்பாய்வுத் திணைக்கள அறிக்கை கிடைத்த பின்பே, சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்குமெனப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

# கிடைக்கும் அதிகாரங்களைவிட,

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள், செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் என்று, தான் நம்புவதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டிருக்கிறார். இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக, அரசு



சமர்ப்பித்துள்ள புதிய நகல் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது சாதகமான பதிலைத் தருவார்கள் என்று தான், எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் பீரீஸ் கூறியிருப்பதானது, சமாதானப் பேச்சுக்களில் அக்கறை கொண்டுள்ளோரை, உற்சாகப்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவற்றைச் சொன்ன அமைச்சர் பீரிஸ், இல்வச இணைப்பாக இன்னுமொரு கருத்தையும் தெரிவித்துள்ளார். 'நாட்டைப் பிரிக்கக்கூடிய எந்த ஒரு திட்டத்திற்கும், அரசு இணங்காது'- என்று அமைச்சர் பீரிஸ தெரிவித்த கருத்தானது, இன்றைய காலகட்டத்தில், ஒரு அரசாங்கத்திடமிருந்து, எதிர்பார்க்கக்கூடிய கூற்றாக இருந்தபோதிலும், இது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

'நாட்டைப் பிரிக்காத தீர்வுத் திட்டம்' - என்று சொல்கின்ற இன்றைய அரசின் அடிப்படைச் சிந்தனைக்கும், 'ஈழத்தைத் தவிர, எல்லாம் தருவேன்' என்று சொன்ன, பிரேமதாஸவின் அன்றைய அரசின் அடிப்படைச் சிந்தனைக்கும் வித்தியாசம் எதுவுமில்லை. பிரச்சினைகள் எவ்வளவு பெரிதாகப் பிரம்மாண்டமாக இருந்தாலும், அவை 'ஒருங்கிணைந்த இலங்கை' - என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்க்கப்படவேண்டும் அல்லது தீர்க்கப்படப்போவதாகத் தோற்றமளிக்கவேண்டும், என்கின்ற சிந்தனைதான் சகல இலங்கை அரசுகளுக்கும் இருந்திருக்கின்றது, இருந்தும் வருகின்றது என்பதைத்தான் பீரிஸின் கூற்றும் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, 'நோய் எவ்வளவு புரையோடிப்போயிருந்தாலும் சரி, அதனை மருந்து சாப்பிடுவதன் மூலம்தான் தீர்க்கவேண்டும். சத்திர சிகிச்சையை எண்ணிப்பார்க்கவும் கூடாது' - என்ற அணுகுமுறையை நாம் இங்கே காணுகின்றோம். இந்த அணுகுமுறை, யதார்த்தத்தில் எவ்வளவு தவறானது என்பதை தமிழ் மக்கள் அறிவாகள்.

இந்தக் கருத்தை வேறுகோணத்தில் நோக்கினால் - 'ஒருங்கிணைந்த இலங்கை' என்ற இவர்கள் இடுகின்ற கோஷத்தின் அடிப்படைச் சிந்தனை எதுவாக இருக்கமுடியும்? நாடு பிரிக்கப்படக்கூடாது என்பது மட்டும்தானா? ஒருங்கிணைந்த இலங்கை என்றால், நிலம் மட்டும்தான் ஒருங்கிணைக்கப்படுகின்றதா? ஒரு நாடு - அல்லது தேசம் என்றால், அது நிலப்பரப்பு மட்டும்தானா? மக்களும், அவர்களது தனித்துவமான இனங்களும் - அந்தத் தத்துவத்தின் கீழ் வரவில்லையா, என்ன?

'அப்படியென்றால், தனித்துவமான இனங்களுக்குரிய மொழிகளும், பண்பாடுகளும், மதங்களும்கூட ஒருங்கிணைக்கப்படுமா? என்ற தர்க்கமும் எழுகின்றது அல்லவா? இல்லை ஒருங்கிணைந்த இலங்கை என்பதற்கு இதுவல்ல அர்த்தம், ஒருங்கிணைந்த இலங்கையில் பாரம்பரிய இனங்களும், அவர்தம் மொழிகளும்- அவற்றிற்குரிய பண்பாடும், தனித்துவமும் பேணப்படும்' என்றுதான் ஆளும் வர்க்கம் சொல்லி வருகின்றது. நாடு பிரிக்கப்படமாட்டாது. அதே வேளை, இனம் - மொழி போன்றவற்றிற்குரிய தனித்துவம் பேணப்படும்- அதுவே ஒருங்கிணைந்த இலங்கையாகும்' என்று, இவர்களே விளக்கமும் தருகின்றார்கள்.

ஆனால், சிக்கலுக்குரிய விவகாரம், அதிகாரத்தில் இருக்கின்றது. அது எந்தளவு பெரிதாக - வலியதாக இருக்கின்றது என்பதில் இருக்கின்றது! அது அந்த வலிமையான அதிகாரம - யாருடைய கைகளில் உள்ளது என்பதில் இருக்கின்றது, இவற்றிற்குரிய விடைகள்.

## மறுக்கும் அதிகாரங்களே அதிகம்

ஆகவே - அந்த அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அவை சமமாக-நியாயமாக இருக்கவேண்டும். ஆனால், 'அதிகாரப் பகிர்வு' என்ற சொற்றொடரைக்கூட, 'அதிகாரப் பரவலாக்கல்' என்று கூறி, அரசு சொற்சிலம்பம் ஆடி வருவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இது ஒரு நழுவல்நிலையாகும்.

இன்று இடைக்கால நிர்வாக சபைக்குரிய கட்டமைப்பில் பிரச்சினைகள் தோன்றியுள்ளநிலையில், நாம் மேற்கூறிய 'அதிகாரம் - அதிகாரப் பகிர்வு - அதிகாரப் பரவலாக்கல்' போன்ற சொற்கள், இங்கே எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதையும், நாம் சிந்திக்க வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் உருவான அன்றைய வட-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சரான, வரதராஜப்பெருமாள்- இந்திய அரசிற்கு ஒரு புகார் கடிததை எழுதியிருந்தார். அக்கடிதத்தில், இலங்கையின் 13 ஆவது சட்டதிருத்தத்தின்கீழ், இந்த அதிகாரப் பரவலாக்கல், தமக்கு எந்த உருப்படியான அதிகாரத்தையும் தரவில்லை என்று அவர் முறையிட்டிருந்தார். தவிரவும், எஞ்சியிருக்கும் சிறிய அதிகாரத்தைக்கூட, பிரேமதாஸவின் நிர்வாகம் தரமறுத்து வருவதையும் குறிப்பிட்டு, வரதராஜப் பெருமாள் இந்திய அரசிடம் முறையிட்டு எழுதியிருந்தார். ஆனால், ஒரு பயனும் கிடைக்கவில்லை.

இப்போது, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, அரசு அளித்துள்ள புதிய திட்டங்கள் குறித்தும், எமக்கு இதே ஐயம் உள்ளது. இந்த இடைக்கால நிர்வாக்கக் கட்டமைப்புக்குரிய திட்டவரைபில், 'காணி, பொலிஸ் நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் வரி அறிவிடல்' தொடர்பாக எந்தவிதமான அதிகாரமும் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, என்ன அதிகாரம் இருக்கின்றது என்ற தெளிவைவிட, என்ன அதிகாரம் இல்லை என பதுதான் இங்கே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஏன் இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து நாம் நோக்கவேண்டும்.

இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய திட்டவரைபில், 'காணி, பொலிஸ் நிர்வாகம், பாதுகாப்பு, வரி அறவிடல்' போன்ற நான்கு விடயங்களில் அதிகாரங்கள் இல்லை என்பது மட்டும் ஏன் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்ற கேள்வியோடு, இன்னுமொரு கேள்வியையும் நாம் சேர்த்துச் சிந்திக்க வேண்டும். 'வெளிநாட்டு விவகார அதிகாரம், வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான அதிகாரம், குடிவரவு-குடிபெயர்வு தொடர்பான அதிகாரம், கடவுச்சீட்டு **(Pass port)** விநியோகிக்கும் அதிகாரம், வெளிநாட்டு விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கும் அதிகாரம்' - என்று எத்தனையோ வகையான அதிகாரங்கள், இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் இல்லை. இது குறித்தும் நாம் சிந்திக்கவேண்டும். அதற்குத் தகுந்த காரணம் இருக்கின்றது.

ஏனென்றால், 'வெளிநாட்டு விவகார அதிகாரம், வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்த அதிகாரம், குடிவரவு-குடிப்பெயர்வு விடயங்கள் தொடர்பான அதிகாரம், கடவுச்சீட்டு விநியோகிக்கும் அதிகாரம், வெளிநாட்டு விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கும் அதிகாரம்' - போன்ற அதிகாரங்கள் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் வரக்கூடிய அதிகாரங்கள் அல்ல. ஆகவே, அவை பற்றிக் கூறவேண்டிய அவசியம் இங்கே எழவில்லை. ஆகவே, இவை பற்றி அரசாங்கம் கோடிட்டுக்காட்டவில்லை.

ஆனால், 'காணி, பொலிஸ், பாதுகாப்பு, வரி அறவிடல்' போன்ற அதிகாரங்கள், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில், முறையான அதிகாரப் பகிர்வின்கீழ் - தரப்பட வேண்டிய விடயங்களாகும. ஆகவே, இந்த அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என்பதையே அரசு சுட்டுகின்றது. அதாவது, ஒரு முறையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் வரக்கூடிய, வரவேண்டிய அதிகாரங்கள், இந்தத் திட்டவரைபில் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்கின்ற இலங்கை சட்ட நிபுணத்துவம்தான் இது.

'வன்முறையை உபயோகிக்காமல், அரசியல் அடிப்படையில், சமாதானப் பேச்சுக்களை நடத்தி உரிய தீர்வினை அடைவதே சிறந்த வழியாகும்' என்று தற்போதைய அரசும், பல உலகநாடுகளும் சொல்லி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், அரசும், உலக நாடுகளும் வன்முறையை வேறு வடிவங்களில் உபயோகித்து வருகின்றது. அதாவது, ஆயுத வன்முறையைப் பிரயோகிக்கமுடியாத இடங்களில், அவர்கள் 'கருத்தியல் வன்முறையையும், உளவியல்வன்முறையையும் பிரயோகித்து வருகின்றார்கள். ஆயுத வன்முறையால் விழைவிக்கக்கூடிய கேடுகளை அல்லது பெறக்கூடிய வெற்றிகளை, கருத்தியல் வன்முறையாலும், உளவியல் வன்முறையாலும் பெறுவதற்காக - அரசும், சில உலகநாடுகளும் முயன்று வருகின்றன. இதற்கு அவர்கள் அரசியலையும், அதிகாரத்தையும் கருவிகளாக உபயோகிப்பதனையும், நாம் அவதானிக்கலாம்.

ஆகவே, தமிழ்மக்களின் போராட்டம் - இப்போது வேறு களத்தில், வேறு பிரச்சினைகளை முகம் கொடுக்கவேண்டிய நிலையிலுள்ளது. இதைத்தான் தமிழீழத் தேசியத் தலைவர் 'அமைதி வழியில் மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முனைந்து வருகின்றோம். காலத்திற்கேற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை' என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

தேசியத் தலைவரின் சிந்தனையையும், செயற்பாட்டையும் சுட்டிக் காட்டுவதாகவே, பாலகுமாரனின் பேச்சும் அமைந்துள்ளது. 'தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக, தேசியத் தலைவர் விளக்கம் அளித்திருக்கின்றார். இன்றைய சர்வதேச அரசியலை முன்கூட்டியே அறிந்து, அதன்படி செயற்படு கின்றோம் என்று, அவர் எங்களுக்குக் கூறியிருக்கின்றார். நாம் சர்வதேசரீதியில், தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்தே செயற்படுகின்றோம். எமது இந்த நிலைப்பாட்டையிட்டு எவரும் அஞ்சத்தேவையில்லை. அநாவசியமான சீண்டுதல்களோ, தேவையற்ற குழப்பங்களோ, சிக்கலோ வராது. இது விடயத்தில் எமது தலைவர் தெளிவான பார்வையோடு இருக்கின்றார். அதற்கமையவே தற்போது காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மக்கள் உணரவேண்டும். இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசு முன்வைத்திருக்கும் நகலுக்கு நாம் திருத்தம் சமர்ப்பிப்பதற்கு முன்பாக, இது விடயத்தில் சகலரையும் ஒன்றிணைத்து ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும். 'எல்லா அறிஞர்களையும், சட்ட வல்லுநர்களையும் ஒன்றிணைத்து, ஒரு சட்டரீதியான - அரசியல்ரீதியான பதிலைத் தயாரியுங்கள்' என்று தேசியத் தலைவர் பிரபாகரன் கூறியிருக்கின்றார். இப்போது எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இலங்கை அரசு இவ்வளவு காலமும் செய்த ஏமாற்றுதல்களை உலகின் முன்பாகத் தெளிவாக அரங்கேற்றம் செய்வதற்கான அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. அரசின் இடைக்கால நகல் என்ற இரண்டு பக்க ஆவணத்தை வைத்துக்கொண்டு, இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றைப் புரட்டிக் காட்டப்போகிறோம்' என்று பாலகுமரன் கூறியிருப்பதானது, எமது கருத்தை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் - தமிழ் மக்களை சட்டரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் ஏமாற்றியே வந்துள்ளன. இதனை மறைப்பதற்காக இராணுவ அடக்குமுறைகளையும், இராணுவ நடவடிக்கைகளையும் அவை பயன்படுத்தி வந்துள்ளன. அரசின் இராணுவ அடக்குமுறைகள் வெற்றியளிக்காமல்போய், இப்போதைக்கு போர் ஓய்வுக்கு வந்ததையடுத்து - சட்டத்தையும், அரசியலையும் அரசு முழுமையாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. இதன் உள்நோக்கத்தை தெளிவுபடுத்தவேண்டிய தருணமும் இதுவே.

இலங்கையின் அரசியல் சிந்தனைகளும், அரசியல் சட்டங்களும், அரசியல் யாப்பும் தமிழ்மக்களுக்கு எதிரானவை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது, போராட்டத்தின் ஒரு நகர்வாகும். அது போராட்டத்தின் முடிவல்ல. அதைப்போலவே, பேச்சுவார்த்தைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்திருப்பதானது, அந்தப் பேச்சுவார்த்தைகள் சரியான பாதையில், முறையாக நடாத்தப்படுவதற்கான அரசியல் அழுத்தமேயாகும். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், பேச்சுவார்த்தைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்திருப்பதும், தமிழர் போராட்டத்தின் இன்னுமொரு நகர்வேயாகும்.

பொதுவாக, சர்வதேச சமூகம் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டிருக்கின்றது. முறையான - உருப்படியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதையும், சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விடயங்களை எவ்வாறு சர்வதேச சமூகம் புரிந்து கொண்டிருக்கினறதோ, அதைப்போல், ஏனைய முக்கியமான அடிப்படை விடயங்களையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையின் சட்டங்கள் அநீதியானவை என்பதையும், அரசியல் யாப்பு தமிழ்மக்களின் நலனுக்கு எதிராக இயற்றப்பட்ட அநீதியானயாப்பு என்பதையும், சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அநீதிகளுக்கூடாக, நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது மடமைத்தனமாகும். இதையும் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசினால் - தமிழ்மக்களுக்கு நீதியான, நியாயமான, கௌரவமான, நிரந்தரமான சமாதானத்தீர்வை வழங்கமுடியாவிட்டால், தமிழ்மக்கள் தமது வழியில்சென்று, தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் கட்டாயம் உருவாக நேரிடும். அந்தநிலை வரும்போது, சர்வதேச சமூகம் அதனை அங்கீகரிக்க வேண்டும். அதுதான் உண்மையான நீதியுமாகும். ஆகவே, தமிழீழத் தேசியத் தலைவர் கூறியதற்கு இணங்க, தமிழீழத் தலைவரின் உரிமைப் போராட்டம் இப்போது புதிய களத்



தில் நடந்து கொண்டிருக்கின்றது. சர்வதேச அரங்கில்தான் நீதிக்கு வெற்றி கிடைக்குமென்றால், அது அப்படியே ஆகட்டும். புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்களின் அரசியல் பணிகளும், பரப்புரைகளும் ஒன்றிணைந்து வேகமாகவும், விரைவாகவும் செயற்படவேண்டிய நேரம் இது.

## விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவின் ஆயத்தவேலைகளைப் பார்வையிடுவதற்காக, கொழும்பு விளையாட்டமைச்சின் பன்னிரண்டு அதிகாரிகள் கொண்ட குழுவினர் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொணடு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கின்றனர்.

விளையாட்டமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ஜெயரட்ணம் தலைமையில் யாழ்.வந்த இக்குழுவினர்- துரையப்பா விளையாட்டரங்கு, புனரமைப்பு மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான வேலைகளையும் பார்வையிட்டுள்ளனர்.

யாழ். அரச உயரதிகாரிகள், விளையாட்டு அதிகாரி ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரியவருகிறது.

## சீருடை பெறும் பாடசாலை மாணவர்க்கான அறிவுறுத்தல்

2004 ஆம் ஆண்டுக்கான சீருடை பெறுதல் தொடர்பான அறிவுறுத்தல், மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, வகுப்பாசிரியரிடம் அல்லது அதிபரிடம் ஒப்பம்பெற்று, மாணவர்கள் வசிக் கும் கிராம அலுவலர்களிடம் சமர்ப் பிக்கவேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் இரு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல்வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் இறுதித்தினம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆகும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பதாரிகள், சீருடை பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இந்தமுறை கிராம அலுவலர்கள் மூலமே சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நேற்றைய இந்திய சுதந்திரதின நிகழ்வுகளிலிருந்து...


இந்தியத் தேசியக் கொடியுடன் சிறுவன்.


தொலைக் காட்சியில் உரையாற்றும் அப்துல் கலாம்.


அணிவகுப்பை ஏற்கிறார் ஜெயலலிதா.


சிறுமிகளின் நடன நிகழ்ச்சி


தேசியக் கொடியுடன் இந்திய முஸ்லிம் பெண்கள்.


டெல்லி செங்கோட்டையில் பொலிஸாரின் பாதுகாப்பு.

# இரத்தம் சிந்திப் போராடுவதை நிறுத்தி வறுமைக்கெதிராக போராடவேண்டும்!

## சுதந்திரதின விழாவில் பாகிஸ்தானுக்கு வாஜ்பாய் அழைப்பு

பாகிஸ்தான், இரத்தம் சிந்திப் போராடுவதை நிறுத்தி, சமாதானத்திற்காக உழைப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமெனறும், வறுமைக்கெதிராகப் போராட முன்வரவேண்டுமென்றும், இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அழைப்பு விடுத்தார்.

நேற்று நடைபெற்ற இந்தியாவின 56 ஆவது சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே, இந்தியப் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக, இரு நாட்டுத் தூதுவர்களும் பரஸ்பரம் பஸ் பிரயாணங்களை மேற்கொண்டிருந்தார்கள்.

சமாதானத்திற்கான ஒரு வெளிப்பாடாக - 8 பாகிஸ்தானியப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றிவாறு, 'வாகா' என்ற எல்லைக்கூடாக இந்தியாவிற்கு வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடபகுதியில்

# தொடர் அணி மீது தாக்குதல்; மூன்று அமெரிக்கர்கள் காயம்!

ஈராக் தலைநகரான பாக்தாத்தின வடபகுதியில், அமெரிக்கப் படையினரின் தொடரணி ஒன்றின் மீது கிரணைட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதில், 2 அமெரிக்கப் படையினரும், 3 ஈராக்கியப் பொதுமக்களும் காயமடைந்தனர்.

காயமடைந்த ஈராக்கியர்களுக்கு, அவ்விடத்தில் வைத்தே சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், படையினர் இருவரும் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், அமெரிக்கப் படையதிகாரிகளில் ஒருவரான வில்லியம் காமக்டொனால்ட் தெரிவித்தார்.

இதேவேளை - ஆரம்பத்தில் அமெரிக்கக் கூட்டுப் படையினருக்கு மிகுந்த ஆதரவைத் தெரிவித்து வந்த ஈராக்கிய 'சியா' முஸ்லிம்களிடையேயும் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

எதிர்வரும் காலங்களில் அமெரிக்கப் படையினருக்கெதிரான தாக்குதல்கள் தொடருமென, 'சியா' மதத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

## 73 பலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவித்தது



பலஸ்தீன விடுதலை அமைப்பைச் சேர்ந்த போராளிகள் தொடரந்தும் தேடப்பட்டுவரும் நிலையில், கடந்த வெள்ளியன்று 73 பலஸ்தீனர்களை, இஸ்ரேல் அரசு விடுவித்தது.

அமெரிக்கா முன்னின்று செயற்படும் சமாதானப் பேச்சுவார்த்தையைக் கௌரவிப்பதற்காக - இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. விடுவிக்கப்பட்டவர்கள் - வெஸ்ற்பாங், காசா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள காவல்நிலையங்கள் வரை அழைத்துவரப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

# அல்கொய்டா முக்கிய நபர் தாய்லாந்தில் கைதானார்!



(தாய்பேய்)

தென்கிழக்காசியாவில், பல குண்டுவெடிப்புகளுக்குக் காரணமாக இருந்தவரும், "அல்கொய்டா" அமைப்பின் முக்கிய நபருமான கம்பாலி, தாய்லாந்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு, அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர், "பிளாஸ்டிற்" சிகிச்சையின் மூலம் தனது முகத்தோற்றத்தினை மாற்றியிருந்ததாகவும் - தாய்லாந்தும், அமெரிக்காவும் இணைந்து நடத்திய தேடுதலில் கைதுசெய்யப்பட்டு, கடந்த புதன்கிழமையன்று அமெரிக்காவின் பிரத்தியேக விமானமொன்றில் அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் தாய்லாந்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்..

202 பேர் வரை உயிரிழக்கக் காரணமான, பாலித்தீவு குண்டுத் தாக்குதலிலும் கம்பாலி சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதி, இந்தோனேஷிய அரசும் அவரைத் தேடி வலைவிரித்திருந்தது.

கம்பாலி தற்போது சிறைவைக்கப்பட்டுள்ள இடத்தை, அமெரிக்கா வெளியிட மறுத்துள்ளது. இதேவேளை - அல்கொய்டா சந்தேகநபர்கள் பலர், பெயர் குறிப்பிடப்படாத பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## மணிப்பூரில் ஆறு பேர் பலி!

இந்தியாவின் சுதந்திர தின நாளான நேற்று, மணிப்பூரில் பஸ் ஒன்றின்மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், 6 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 14 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் மூவர் பெண்களௌனத் தெரியவருகிறது.

பாலம் ஒன்றில், இந்தியப் படையினரை இலக்குவைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே நேற்று அதிகாலை வெடித்து, இந்த சேதங்களை ஏற்படுத்தியதாக மணிப்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உலகவலம்

## லைபீரியாவில் மக்களின் பாவனைக்காக

# பாலங்களை திறந்தனர் சமாதானப் படையினர்!

(மொன்ரோவியா)

லைபீரியாவின் தலைநகர் மொன்ரோவியாவில் உள்ள பாலங்கள், மக்களின் பாவனைக்காக, நைஜீரிய சமாதானப் படையின்ரால் நேற்று முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட லைபீரிய மக்கள், உணவிற்காக தானியக் களஞ்சியங்களை நோக்கி நகரத்தொடங்கியதை அடுத்தே, பாலங்களை நைஜீரிய சமாதானப் படையினர் திறந்துவிட்டுள்ளனர். இதேவேளை, மக்களின் பாவனைக்காக உணவுப் பொருட்கள், மருந்து ஆகியவற்றுடன் துறைமுகத்தில் கப்பல் ஒன்று தரித்துநிற்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, தற்போது பதவியேற்றுள்ள இடைக்கால ஜனாதிபதி "மொஷடி பிளா" கானாவில் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தினவெளியீடு
விஜயகாந், கிரண் நடித்த
தென்னவன்

காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30
(சி-1284)

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
அறிவித்தல்
18.08.2003 திகதியன்று ஆரம்பமாகவிருந்த இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
பதிவாளர்
15.08.2003
(சி-1349)

HE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து
மேற்படிப்பு வரை சிறந்த
ஆசிரியர்கள், சகல
பாடங்கள்
426 (302), K.K.S. Road,
Jaffna.
(சி-1296)

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித், சிம்ரன் நடித்த
வாலி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
BULE STREAK
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சத்திர சிகிச்சைகளுக்கான கிளினிக் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்படும் சத்திர சிகிச்சைக்கான கிளினிக் தினங்கள் மாற்றப்பட்டுள்ளதாக, வைத்தியசாலையின் பதில் நிர்வாக உத்தியோகத்தர் பி. மகேந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைபெறும் நோயாளர்களுக்கான கிளினிக்குகளை, திங்கட்கிழமைகளில் - டொக்டர் தயாளன் அம்பலவாணர், செய்வாய்க்கிழமைகளில்- டொக்டர் எம்.சிவகுமார், வியாழக்கிழமைகளில் - டொக்டர் என்.ரவிராஜ் ஆகியோர் நடத்துவர்.

இந்தப் புதிய நடைமுறை, எதிர்வரும் 25 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், 28 ஆம் திகதி அழைக்கப்பட்ட நோயாளர்கள் 25 ஆம் திகதி சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சியில் அனுமதியளிக்கப்பட்ட காணிகளில்

# விவசாய நடவடிக்கையில் ஈடுபவதற்கு படையினரின் அனுமதி பெறவேண்டும்!

தென்மராட்சிப் பகுதியில் விவசாய நடவடிக்கைக்காக - இராணுவத்தினரால் அனுமதியளிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்வோர், கமநலத் திணைக்களத்தினூடாகத் தம்மிடம் அனுமதிபெறவேண்டுமென, இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

நீண்டகாலமாகத் தென்மராட்சிப் பிரதேசத்தில் - இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த இடங்களிலிருந்து, ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களை - பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு, படையினர் அனுமதியளித்திருந்தனர்.

ஆனால், தற்போது அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள தம்மிடம் அனுமதிபெறவேண்டுமென, இராணுவத்தினர் தெரிவித்ததையடுத்து, விவசாயிகள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்களின் மூன்றாம் ஆண்டு நினைவுப் பேருரை, இன்று காலை 10 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வரவேற்புரையை ஞாபகார்த்தச் சபைச் செயலாளர் ச.பத்மநாதன் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில், 'சைவ வாழ்வில் கந்தபுராணம்' என்ற பொருளில்- யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.



நாடாளுமன்றில் நேற்று விசேட உரையாற்ற வந்திருந்த தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சினவத்ராவை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் ஆகியோர் வரவேற்று அழைத்துச்செல்வதை படத்தில் காணலாம்.

# பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

(ஆழியவளை)

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை, பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

பெறுபேற்றினை மீளாய்வு செய்யவிரும்பும் விண்ணப்பதாரிகள் - எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு, பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (122)

## வட்டக்கச்சியில் மாட்டுவண்டிச் சவாரி!

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில், வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக் கழகத்தினால் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, வட்டக்கச்சி விளையாட்டுத் திடலில், நாளை மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த போட்டியாளர்களும் பங்குபற்ற முடியுமென, தமிழீழ விளையாட்டுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சியில் கபடிப் பாசறை!

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து கபடிப் பயிற்சிப் பாசறை ஒன்று, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறும். பயிற்சியாளராக திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜஸ்ரின் பெர்னாண்டோ என்பவர் பணியாற்றுகின்றார்.

# நாளை நாவலர் கலாசார மண்டபத்தில் ஹர்த்தால் 50 ஆம் ஆண்டு நினைவு நாள்

இலங்கை அரசாங்கத்தின் - மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து, மக்கள் கிளர்ந்தெழுந்து 'ஹர்த்தால்' நடாத்திய ஐம்பதாவது வருட நினைவுதினம்- நாளை மாலை நான்கு மணிக்கு நாவலர் காலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண சமூக விழிப்புணர்வு மன்ற ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில்,

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தைச் சேர்ந்த இ.தவராசா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி மத்திய குழு உறுபபினர் எஸ்.ஆர்.எட்வேட், இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம், ஓய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.இராசையா, சேகர், இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சொ.சிவபாலன், எ.சி. ஜோர்ஜ், கூட்டுறவு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு, சிறப்புரையாற்றவுள்ளனர்.

# 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 400 பாடசாலைகள் மூடப்பட்டன!

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

1999 ஆம் ஆண்டில் - இலங்கையில் 10 ஆயிரத்து 157 பாடசாலைகள் இருந்தன. இவற்றில் 2001 ஆம் ஆண்டுவரை 400 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று, இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் அறிக்கையின் பிரகாரம்- 50 பிள்ளைகளுக்குக் குறைவான பாடசாலைகள் - 1360 எனவும், இதில் 173 பாடசாலைகள் குருநாகல் மாவட்டத்தில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பாடசாலைகளில் 15 இக்கும் குறைவான பிள்ளைகள் கற்கும் 15 பாடசாலைகள் உள்ளன என்றும் தெரிவிக்கபபடுகிறது.

இந்த அறிக்கையின்படி மேலும் பல பாடசாலைகள் மூடப்படலாம் என்றுதெரியவருகின்றது. மூடப்பட்ட பாடசாலைகள் இயங்கிய கட்டடங்கள் எவ்வித பாவனையுமின்றி உள்ளது.

இந்தக் கட்டங்களிலிருந்து ஓடுகள், மரங்கள் களவாடப்பட்டு வருகின்றன என்று, கல்வி அமைச்சின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொலைபேசி இலக்கங்கள் கொழும்பில் நேற்று மாற்றம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினர் கொழும்பையும், அதனைச் சார்ந்த பிரதேசங்களிலும் தொலைபேசி இலக்கங்களில் நேற்றுமுதல் மாற்றம் செய்துள்ளனர். இதன்படி ஆறு இலக்கங்களைக்கொண்ட தொலைபேசி இலக்கங்கள் நேற்று முதல் ஏழு இலக்கங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய தொலைபேசி இலக்கங்களில் ஆறு இலக்கங்களைக் கொண்ட எண்களுக்கு முன்பாக இரண்டு என்ற இலக்கத்தைச் சேர்த்து அழைப்பை ஏற்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இரண்டு என்ற இலக்கத்துடன் ஆரம்பிக்கும் தொலைபேசிகளுக்கு இந்த இலக்கம் பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இணைப்பைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா ரெலிகொம் தெரிவித்துள்ளது.

## புனரமைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

வேலணை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவிருந்த - பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டமும், பிரதேச புனரமைப்புக்குழுக் கூட்டமும் தவிர்கக முடியாத காரணத்தால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக, வேலணைப் பிரதேச செயலகத் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## உதவி அரச அதிபர்கள் சென்னை விஜயம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 15 உதவி அரசாங்க அதிபர்கள் நிர்வாகத்துறை கற்கைநெறிக்காகச் இன்று சென்னை செல்லவுள்ளனர்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலமைப்பரிசினைப் பெற்று பத்துநாள் கற்கைநெறிக்காக இவர்கள் சென்னை செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலை....

மித்திருப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சிபார்சுகள் தெரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்கள ஊடாகவும், அமைப்பாளர்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலேயே இந்த விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## சவப்பெட்டியை...

எனத் தெரிவித்த அவர்கள் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கு முன்னால், சவப்பெட்டியை வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

சவப்பெட்டி ஒன்று தமது அலுவலகத்துக்கு முன்னால் வைக்கப்பட்டதாக, மட்டக்களப்புப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தின் பதில் தலைமை அதிகாரி லைவா பென்ரவி தெரிவித்தார்.

## இரகசியப் ...

இரகசியப் பொலிஸார் இக்கொலை தொடர்பாக நான்கு தினங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார்கள் என பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றிரவு 7 மணி முதல் மூதூர் பொலிஸ் பிரதேசத்தில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1538 திகதி: 15.08.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| E | 2 | 7 | 6 | 1 | 5 | 4 |

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.10 | 156.70 |
| 1 யூரோ | 108.99 | 110.68 |
| 1 சுவிஸ் பிராங் | 70.45 | 71.71 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.23 | 63.23 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.90 | 25.90 |

## மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு உதவ அயர்லாந்து நிபுணர்கள் வருகை

அயர்லாந்து நாட்டிலிருந்து சிறப்புத் தேர்ச்சி பெற்ற 9 பேர் அடங்கிய நிபுணர்குழு, யாழ்ப்பாணத்தில் பரியோவான் கல்லூரியில், இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பரிசோதித்து மதிப்பீடு செய்து அவற்றிற்குரிய பயிற்சி நெறிகள் அடங்கிய ஆலோசனைகளை வழங்க உள்ளது.

இவ் ஆலோசனைகளை பெறவிரும்புவோர், கீழ்காணும் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட அளவு பிள்ளைகள் மட்டுமே நிபுணர்களால் மதிப்பீடு செய்ய முடியுமானதால், முன்கூட்டியே உங்களைப் பதிவு செய்து உங்களுக் கென குறிப்பிட்ட திகதியையும், நேரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

Millennium Institute For
Children With Special Needs,
C/O Promoters Engineening Company Limited,
*844, Point Pedro Road, Nallur, Jaffna*
தொலைபேசி.இல 021 222 5780 (453)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.